பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
09 08 2024 **FRIDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி – செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நியூஸிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், இருநாடுகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக திகழ்கின்றனர் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. ஜம்மு கஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தல் தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையர்கள் குழு இன்று அங்கு செல்கின்றனர்.

3. தமிழகத்தின் நியாயவிலைக் கடைகளில் நிலவும் துவரம் பருப்பு, பாமாயில் தட்டுப்பாடுகள் இம்மாத இறுதிக்குள் சரி செய்யப்படும் என்று கூட்டுறவுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு வென்ற திரு. முகமது யூனுஸ் பதவியேற்றுக் கொண்டார்.

5. ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்தப் பிரிவில் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் **Aman Sehrawat** இன்று பங்கேற்கிறார்.

**>>>>><<<<<**

நியூஸிலாந்தில் வசிக்கும் 3 லட்சம் இந்திய வம்சாவளியினர், இருநாடுகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து நாட்டின் ஆக்லாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் அவர் உரையாடினார்.

இருநாடுகளிடையே, தூதரக உறவை மேம்படுத்த ஆக்லாந்தில் இந்திய தூதரகம் திறக்கப்படும் என்றும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சுதந்திர தினத்தை ஒட்டி, இல்லந்தோறும் மூவர்ணக்கொடி ஏற்றும் இயக்கம் இன்று தொடங்கி வரும் 15ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதையொட்டி, இந்த ஒருவார காலத்தில் இசை நிகழ்ச்சிகள், தெருவோர நாடகங்கள், ஓவியப் போட்டி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 13ஆம் தேதியன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் சிறப்பு மூவர்ணக்கொடி இருசக்கர வாகனப் பேரணியும் புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தலை நடத்துவதற்காக முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக தலைமைத்தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார், தேர்தல் ஆணையர்கள் திரு. ஞானேஷ் குமார், திரு. எஸ்.எஸ். சாந்து ஆகியோர் இன்று அங்கு செல்கின்றனர்.

இரண்டு நாட்கள் பயணம் மேற்கொள்ளும் அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில பிரதிநிதிகளுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளனர்.

அப்போது தேர்தல் தொடர்பான அவர்களுடைய கருத்துக்களை கேட்டறியவுள்ளனர்.

பின்னர், வாக்குப்பதிவை சுமுகமாக நடத்துவது குறித்தும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களுடனும் தேர்தல் ஆணையர்கள் விவாதிக்கவுள்ளனர்.

>>>>><<<<<

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், இன்று முதல் 3 நாட்கள் மாலத்தீவில் பயணம் மேற்கொள்கிறார்.

அப்போது இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை கண்டறிவது குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் விவாதிக்கவுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் காலணி ஏற்றுமதி 2030ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் டாலர் அளவுக்கு நடைபெற வாய்ப்புள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய – சர்வதேச காலணி கண்காட்சியின் தொடக்க நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

நவீன தொழில்நுட்பத் திறனுடன் காலணி உற்பத்தி துறையில் உலகில் சிறந்து விளங்க வாய்ப்பிருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்துறையின் வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளதாகவும் இதுதொடர்பாக கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அளிக்கலாம் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

பெட்ரோலுடன் 20 சதவீதம் எத்தனால் கலப்பது என்ற இலக்கை அடுத்த நிதியாண்டிற்குள் அடைவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தின் கீழ், எத்தனால் மீதான சரக்கு மற்றும் சேவை வரி, ஐந்து சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

எத்தனால் உற்பத்தி திறனை அதிகரிக்க வட்டி மானியத் திட்டம், செயல்படுத்தப்படுவதாகவும் திரு. சுரேஷ் கோபி தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டின் இயற்கை வளங்கள் தற்சார்பை அடைவதற்கு முக்கிய காரணியாக இருக்கும் என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் அவர் நேற்று உரையாடினார்.

அவர்களுடைய பரிந்துரைகள் குறித்து அமைச்சகத்தால் ஆய்வு செய்யப்பட்டு, அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. கிஷன் ரெட்டி உறுதியளித்தார்.

>>>>><<<<<

மணிப்பூர் மாநில மலைப்பகுதிகளில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. **Biren Singh** உறுதியளித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது இதனை தெரிவித்த அவர், மணிப்பூர் மாநில மலைப்பகுதிகளில் அமல்படுத்தப்பட்டுள்ள ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இச்சட்டத்தை நீக்குவதற்கு மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று திரு. பைரன் சிங் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஹரியானா மாநிலத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. நயப் சிங் சைனி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் மீது குற்றவியல் வழக்கு இருந்தாலோ, பத்திரிகை நெறிமுறைகளை மீறினாலோ அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்ற விதிகள் இதன் மூலம் நீக்கப்படவுள்ளது.

ஹரியானாவில் 60 வயதுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் 15 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு வென்ற திரு. முகமது யூனுஸ் பதவியேற்றுக் கொண்டார்.

டாக்காவில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவருக்கு அந்நாட்டு அதிபர் திரு. முஹமது சஹாபுதீன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளின் தூதர்கள் பங்கேற்றனர்.

83 வயதான திரு. முகமது யூனுஸ், சிறுகடன் திட்டத்தின் மூலம் பங்களாதேஷ் நாட்டின் சாதாரண மக்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட்டதற்காக 2006ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டுள்ள அவருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பங்களாதேஷில் வசிக்கும் ஹிந்து உட்பட சிறுபான்மையினர் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும், விரைவில் அங்கு இயல்பு நிலை திரும்பும் என்றும் தாம் நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாட்டு மக்களின் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக இந்தியா தொடர்ந்து பணியாற்றும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் படித்து 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கான 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கோவையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்திட்டத்தின் மூலம் சுமார் 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்காக, நடப்பாண்டில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுவதாகவும், பொருளாதார வசதி குறைவு உட்பட பல்வேறு காரணங்களால் உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்கள் உயர்கல்வியில் சேர இத்திட்டம் உதவும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தின் நியாயவிலைக் கடைகளில் நிலவும் துவரம் பருப்பு, பாமாயில் தட்டுப்பாடுகள் இம்மாத இறுதிக்குள் சரி செய்யப்படும் என்று கூட்டுறவுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் திண்டல் கிளையில் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கூடுதல் குடும்ப அட்டைதாரர்களுக்கும் உணவுப்பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புதிதாக 2 லட்சத்து 80 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் திரு. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ராமநாதபுரம் மாவட்டம், பாம்பனைச் சேர்ந்த 32 மீனவர்களை எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அவர்களுடைய 4 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இந்த மீனவர்களை மன்னார் கடல்பகுதியில் இலங்கை கடற்படையினர் கைது செய்ததாகவும், பின்னர் அவர்களை புத்தளம் மாவட்டம், கற்பிட்டி கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பாரிஸில் நேற்றிரவு நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவர் 89 புள்ளி நான்கு ஐந்து மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் மல்யுத்த வீரர் சுஷில்குமார், பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து ஆகியோருக்குப் பின் தொடர்ந்து இரண்டாம் முறையாக ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற பெருமையை நீரஜ் சோப்ரா பெற்றுள்ளார்.

வெள்ளி பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவரது வெற்றியால் நாடே பெருமைப்படுவதாகவும், எதிர்கால தலைமுறையினருக்கு இது ஊக்கமளிப்பதாகவும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நீரஜ் சோப்ரா தனது திறமையை மீண்டும் நிரூபித்துள்ளதாகவும், இதனால் நாடு மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேபோல், ஹாக்கியில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணியினருக்கும் குடியரசுத்தலைவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வீரர்களின் திறன், போராடும் குணம் ஆகியவை நாட்டின் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

பதக்கம் வென்ற இந்திய அணியினருடன் பிரதமர் தொலைபேசியில் உரையாடி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த வெற்றியின் மூலம், நாட்டில் உள்ள இளைஞர்களிடையே ஹாக்கி விளையாட்டு மேலும் பிரபலமாகும் என்று சமூகவலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையே, வெண்கலப்பதக்கம் வென்ற வீரர்களுக்கு தலா 15 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை இந்திய ஹாக்கி கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அணியின் பணியாளர்களுக்கு தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்தப் பிரிவில் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் **Aman Sehrawat** இன்று பங்கேற்கிறார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Puerto Rico-**வின் **Darian Cruz-**ஐ அவர் எதிர்கொள்கிறார்.

400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் இன்று பங்கேற்கின்றன.

கோல்ஃப் பிரிவில் அதிதி அசோக், தீக்ஷா தாகர் ஆகியோர் மூன்றாவது சுற்றில் இன்று பங்கேற்கின்றனர்.

>>>>>END<<<<<